MIN ALAI

மின் அலை

September 2026 Volume : 14 Issue 09 Price Rs. 18.00/- Ann. Sub. Rs. 216/-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.ச.ஜோசப் விஜய்** அவர்கள் 23.09.2026 அன்று சென்னை அண்ணாசலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்திற்கு நேரில் சென்று மின்விநியோகம் மற்றும் மின்கட்டுப்பாட்டு தொடர்பான மையங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

தலைவர்	பொதுச் செயலாளர்	பொதுப் பொருளாளர்
பொர்.A.அந்தோணிபடோவராஜ்	பொர்.V.S.சம்பத்குமார்	பொர்.N.R.செந்தில்

புதிதாக பொறுப்பேற்றுள்ள மதிப்பிற்குரிய பொறியாளர் M.சுப்பிரமணியன், தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களைச் சங்கம் 16.09.2026 அன்று மரியாதை நிமித்தமாக சந்தித்து, அவரது பதவிக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டது.

மின் வாரிய ஓய்வூதியர்களுக்கு புதிய மருத்துவ காப்பீடு திட்டம் 2026 செயல்படுத்துவது சம்பந்தமாக, மாநில அளவில் ஆலோசனைக் கூட்டம் 10.09.2026 அன்று இயக்குனர்/நிதி, வாரிய செயலாளர், முதன்மை அகநிலை தணிக்கை அலுவலர் ஆகியோர் முன்னிலையில், ஓய்வூதியர் சங்கங்களுடன் வாரிய தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு த.நா.மி.வா.ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கம் சார்பில் 13 முறையீடுகள் வைக்கப்பட்டது.

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்
பொர்.S.அமர்நாத்

Page	Contents

6	Our Representations
8	Board Orders
13	யானைக்கு பாகனும் இல்லை அங்குசமும் இல்லை
14	டெங்கு காய்ச்சல் – விழிப்புணர்வுடன் தடுப்போம்
15	நேபாளத்தில் நடந்தது என்ன?
16	இணை உரிமம் – Parallel Licensing
18	பத்திரிக்கை செய்தி

TNEB ENGINEERS' SANGAM
Udangudi Building,
TNEB Complex,
144, Anna Salai,
Chennai - 600 002.
Ph : 2852 1968
No. 44, Ramasamy Garden Street,
Royapettah, Chennai - 600 014.
Ph : 2848 7517
E-mail : tnebes@yahoo.co.in
Web : www.tnebes.org

President : 9443872166
General Secretary : 9840956783
General Treasurer : 9499014992

மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 14 **செப்டம்பர் -2026** **இதழ் 09**

வாலு போயி கத்தி வந்தது...

தமிழக மின்வாரியத்தில் களப்பணியாளர்கள், பொறியாளர்கள் என சுமார் 65,921 பணியிடங்கள் காலியாக உள்ளதாக அமைச்சரின் வெள்ளையறிக்கை கூறுகின்றது. நித்தம் வளரும் மின்வாரியத்தின் அன்றாடச் செயல்பாடுகளையே முடக்கும் இந்த ஆள்பற்றாக்குறையைத் தீர்க்க, 10,000 தொடக்கநிலை பணியாளர்களை 5 ஆண்டு கால "நிலையான பணி நியமனம்" (Fixed Term Employment -FTE) முறையில் நியமிக்க தமிழக அரசு அறிவித்துள்ளது. இது ஆறுதலளிப்பதற்குப் பதிலாக கடும் அதிர்ச்சியையே தருகிறது.

ஏற்கனவே உள்ள ஒப்பந்தத் தொழிலாளர் முறையே வாரியத்திற்கும் தொழிலாளர்களுக்கும் பெரும் பிரச்சனையாக அமைந்துள்ள சூழலில், "வாலு போயி கத்தி வந்த கதையாக" FTE எனும் புதிய தற்காலிக முறையைப் புகுத்துவது ஆபத்தானது. 24 மணி நேரமும், 365 நாட்களும் தொடர்ந்து இயங்க வேண்டிய மின்வாரியம் போன்ற அத்தியாவசிய சேவைத்துறைக்குக் காலக்கெடுவுடன் கூடிய பணி நியமனம் முற்றிலும் அபத்தமானது.

தொழிலாளர் நலனுக்கு உலை:

FTE முறை தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பையும் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கும். பதவி உயர்வு, பணிமூப்பு, ஊதிய உயர்வு மற்றும் நிதி நிலைத்தன்மை அற்றுப்போகும். 'இந்த நிறுவனம் என்னுடையது' என்ற பற்றுதலோ (Belongingness), உளவியல் ரீதியான பாதுகாப்போ இதில் சாத்தியமில்லை. நிரந்தர பணியில் உள்ள கேங்மேன் பணியாளர்களே, பணி மாற்றம், பதவி மாற்றத்திற்கு போராடி வரும் நிலையில், FTE ஊழியர்களின் வருகை மேலும் ஒரு புதிய போராட்ட களத்தை உருவாக்கி, தொழில் அமைதியை சீர்குலைக்கும்.

நிறுவன நினைவாற்றல் இழப்பு (Institutional Memory Loss):

நிரந்தரப் பணியாளருக்கு மட்டுமே ஒரு குறிப்பிட்ட பகுதியின் மின்பாதை, மின்மாற்றி (Transformer) மற்றும் அதன் பழைய கோளாறுகள் பற்றிய முழு அனுபவ அறிவு (Knowledge Transfer) இருக்கும். புதிய FTE ஊழியர் முறையைக் கற்றுக் கொள்ளவே 2 ஆண்டுகள் ஆகும். அதன்பின் 3 ஆண்டு காலமே உள்ள நிலையில் அவர்கள் வேலைக்கான பாதுகாப்பு இன்மையால், சமூக அந்தஸ்து மற்றும் எதிர்காலத்தை குறித்த சிந்தனையிலேயே, மீதமுள்ள மூன்றாண்டு காலமும் எந்தவித ஆக்கபூர்வமான பலனும் இன்றி கடந்துவிடும். அடுத்து வரும் புதிய ஊழியர் மீண்டும் 'பூஜ்ஜியத்தில்' இருந்தே தொடங்க வேண்டும். இது 100% பாதுகாப்பற்ற சூழலையும், மின்வாரியத்திற்கு "நிறுவன நினைவாற்றல் இழப்பையும்" (Institutional Memory Loss) ஏற்படுத்தும்.

பொருளாதாரச் சீரழிவு & சமூகப் பாதிப்பு:

பராமரிப்புக் குறைபாடு, அடிக்கடி ஏற்படும் Breakdown, உபகரணங்களின் பழுது ஆகியவற்றால் பராமரிப்புச் செலவு கூடி, இறுதியில் நுகர்வோர் மீது கூடுதல் கட்டணமாகவோ அரசின் மானியச் சுமையாகவோ விடியும். மேலும், பணி நிரந்தரம் கோரி எழும் தொடர் போராட்டங்கள் தொழில் அமைதியைச் சீர்குலைக்கும். 2024–25 நிதியாண்டிற்கான 65 மின் விநியோக நிறுவனங்களின் செயல்பாட்டு மற்றும் நிதிசார் செயல்திறன் குறித்த விரிவான மதிப்பீட்டை வழங்கும் மின் அமைச்சகத்தின் 14–வது ஒருங்கிணைந்த மதிப்பீடு மற்றும் தரவரிசை அறிக்கையில், TNPDCL நிறுவனம் 39–வது இடத்தைப் பிடித்துள்ளது; இதற்குப் பணியாளர் பற்றாக்குறையும் ஒரு முக்கிய காரணமாகும். அத்தியாவசியப் பணியாளர்கள் நிரந்தரமாக இருப்பதே நமது நிறுவனத்திற்கும், நாட்டின் வளர்ச்சிக்கு நல்லது. FTE என்பது காய்ச்சலுக்குப் போடும் பாராசிட்டமால் போல் தற்காலிக நிவாரணமே தவிர, நிரந்தரத் தீர்வல்ல.

பொருள்கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். (குறள் 675)

நிரந்தர வேலைவாய்ப்பைப் ஏற்படுத்தித்தராமல், தொழிலாளர்களை எப்போதும் பயத்திலேயே வைக்கும் இந்த FTE முறை, பணியமைதியை சீர்குலைக்கும். அனைவருக்கும் நிரந்தர வேலைவாய்ப்பு என்பதே நமது ஒரே கோரிக்கை. "தற்காலிக ஊழியர் – நிரந்தர இருள்" என்பதை உணர்ந்து அரசு செயல்படுமா?

பொதுச்செயலாளர் கடிதம்

அன்பு பொறியாளர்களே,
வணக்கம்.

காலநிலை மாற்றத்தினால் செப்டம்பர் மாதத்திலும் கோடையின் தாக்கம் போல மின் நுகர்வு சற்றும் குறையாமல் அதிகரித்த வண்ணமே உள்ளது. தொடர்ந்து ஆட்கள் பற்றாக்குறை (இல்லா நிலை), பொருட்கள் பற்றாக்குறை நிலவி வரும் சூழலிலும், சிறு சிறு மின்தடைகள்கூட சமூக ஊடகங்களால் திரித்தும், பெரிதாக்கப்பட்டும் ஒளிபரப்பப்பட்டு வரும் நிலையில், அனுதினமும் தடையில்லா மின்சாரம் வழங்கிட அயராது பணியாற்றி வரும் பொறியாளர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் முக்கியப்பங்காற்றி வரும் மின்சார துறையில் நிலவிவரும் ஆட்கள் பற்றாக்குறையை போக்கிட தொடர்ந்து முறையீடு செய்யப்பட்டு வருகிறது. வாரியத்தின் தரப்பில் துவக்க நிலைப் காலிப்பணியிடங்களைக், நிரந்தர பணியாளர்களைக் கொண்டு நிரப்பிட முயற்சிகள் ஏதுமின்றி, தற்காலிக தீர்வாக குறைந்தபட்ச காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் களப்பணியாளர்களை நியமிக்கும் உத்தரவுகளே வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சட்டசபையில் மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் அவர்கள் மின்வாரியத்தில் குறுகிய கால நியமன அடிப்படையில் (Fixed Time Employement) என ஐந்து ஆண்டு காலத்திற்கு மட்டும் சுமார் 10,000 களப்பணியாளர்கள் நியமித்திட அறிவிப்பு செய்துள்ளார்கள். இது மின்வாரியத்தின் கட்டமைப்பை, தொழில் அமைதியை முழுமையாக சீர்குலைக்கும் இந்த ஆபத்தான அறிவிப்பினை பொறியாளர் சங்கத்தின் சார்பில் கடுமையாக எதிர்க்கிறோம். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து இதனை நடைமுறைப்படுத்திட வாரியத் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Fixed Term Employement (FTE) அறிவிப்பினை முற்றிலும் கைவிட வலியுறுத்தி கடந்த 10.09.2026 அன்று நடைபெற்ற அனைத்து தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் வாரிய தலைவரிடம் முறையீடு செய்திடவும், இது குறித்து அனைத்து தொழிற்சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, அதன் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் முறையீடு செய்யப்பட்டுள்ளது. JAC-ன் முறையீட்டினைத் தொடர்ந்து, வரும் 28.09.2026 அன்று அனைத்து தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

நமது முன்னாள் வாரிய தலைவர் திரு.J.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப அவர்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராகவும், நமது முன்னாள் இயக்குனர் (விநியோகம்) பொர்.A.R.மாஸ்கர்னஸ் அவர்கள் ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். பொறியாளர் சங்கத்தின் சாரபில் இருவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேம்.

கடந்த 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற TNPSC எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 656 நபர்களுக்கு, தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் நேரடி நியமன உத்தரவுக்கான பட்டியல் வாரியத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது. விரைவில் பணிநியமன உத்தரவுகள் வழங்கப்பட உள்ளது.

கடந்த மே 2026 மற்றும் ஜூலை 2026 மாதங்களில் வழங்கப்பட்ட உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள் அனைவரையும் உடனடியாக பணி விடுப்பு செய்யவும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் பணியேற்பு செய்யவும், வாரியதலைவரின் உத்தரவின்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பணியிட ஒதுக்கீட்டில் மாறுதல் வேண்டி காத்திருந்த பொறியாளர்கள் அனைவரையும் உடனடியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களிலேயே பணியாற்றிடவும், வரும் பருவமழை காலம் முடியும் வரை, பதவி உயர்வில் மாறுதல் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படாது எனவும் வாரியத்தலைவரால் அனைத்து தலைமை பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற அனைவரும் உடனடியாக புதிய பதவிகளில் இணைந்து பணியாற்றிட கேட்டுக்கொள்கிறேன்.

இளநிலை பொறியாளர் / மின்னியல் முதல் நிலை பதவி உயர்வுக்கு தகுதியான நபர்களுக்கு call for செய்ய சங்கத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. call for நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. மிகுந்த காலதாமதம் மற்றும் நடைமுறையில் இருக்கும் விகிதாச்சாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தகுதியான காலிப் பணியிடங்களுக்கு அதிகப்படியான எண்ணிக்கையில் call for செய்ய தொடர்ந்து முறையீடுகள் வாயிலாக வலியுறுத்தப்பட்டுள்ளது. விரைவில் call for உத்தரவுகள் எதிர்பார்க்கப்படுகிறது. இளநிலை பொறியாளர் / இரண்டாம் நிலை பொறியாளர்கள் உடனடியாக தங்களது 3 ஆண்டுகளுக்கான PAR அனுப்பிட நடவடிக்கை எடுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இளநிலை பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவிஉயர்விற்கு தகவல்கள் முழுமையாக வந்தடைந்துள்ளது. தகவல்கள் சரிபார்க்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. விரைவில் DPC நடவடிக்கைகளை இறுதி செய்திட சங்கத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. நீண்ட நாட்களாக நிலுவையிலிருக்கும், இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் இரண்டாம் நிலை பதவிஉயர்வுக்கான பட்டியலை விரைவில் இறுதி செய்து பதவி உயர்வுகள் வழங்கிட வலியுறுத்தப்பட்டுள்ளது.

இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் முதல் நிலை பதவி உயர்வுடன் தொடர்புடைய நீதிமன்ற வழக்கின் அடிப்படை வழக்கில் இறுதித்தீர்ப்பு பெறப்பட்டுள்ள நிலையில், உடனடியாக பதவி உயர்வுக்கு Call for செய்ய தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 29.08.2026 அன்று செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு 60 பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

உதவி செயற்பொறியாளர் / மின்னியல் மற்றும் செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு பட்டியலில் மீதமுள்ள பொறியாளர்களுக்கு உரிய காலிபணியிடம் வந்ததும், பதவி உயர்வு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும், உதவி செயற்பொறியாளர் / இயந்திரவியல் மற்றும் சிவில் பதவி உயர்வுக்கு தகவல்கள் முழுமையாக வந்துள்ள நிலையில் விரைந்து பதவி உயர்வு பெற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த 07.09.2026 அன்று தலைமை பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு 24 பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் நமது உறுப்பினர் பொர்.V.ஆதிலட்சுமி அவர்கள் தலைமை பொறியாளர் / விழுப்புரம் மண்டலமாக பதவி உயர்வு பெற்றுள்ளார். பொறியாளர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

மேற்பார்வை பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு பட்டியல் அனுமதியினை விரைந்து அளித்திட கோரி பொறியாளர் சங்கத்தின் சார்பில் முறையீடு அளிக்கப்பட்டுள்ளது. DPC நடவடிக்கைகள் இறுதி நிலையினை எட்டியுள்ளது.

சங்கத்தின் தொடர் முறையீடுகளின் பயனாக, புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயக்கத்திலுள்ள 232 துணைமின் நிலையங்களுக்கு (33KV SS–139; 110KV (non grid)-88; 11KV grid SS-3; 230KV SS-2) குறைந்தபட்சமாக 50% புதிய பணியிடங்கள் கடந்த 24.07.2026 அன்று அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்து மீதமுள்ள 50% பணியிடங்களுக்கும் அனுமதி வழங்கிட தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 07.09.2026 அன்று மயிலாப்பூர் 230KV துணை மின் நிலையத்தில் பணியின்போது ஏற்பட்ட எதிர்பாராத விபத்து காரணமாக, எனது இடது கை மற்றும் முகத்தில் ஏற்பட்ட தீக்காயங்களுக்கு சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு (தீவிர சிகிச்சை பிரிவில்) சிகிச்சை பெற்று வந்தேன். கடந்த 17.09.2026 அன்று மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினாலும், தொடர் மருத்துவ கண்காணிப்பிலும், ஓய்விலும் இருக்கவேண்டியுள்ளது. காயங்களும் விரைந்து குணமடைந்து வருகிறது.

இக்கட்டான இத்தருணத்தில் விரைவில் பூரண நலம்பெற வேண்டி பிரார்த்தனை செய்த அனைவருக்கும், ஆர்வமுடன் நலம் விசாரித்து அன்பினை பகிர்ந்த அனைத்து உறுப்பினர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவரின் விருப்பத்திற்கேற்ப விரைவில் பூரண நலமடைந்து, சங்க பணிக்கு திரும்பிட ஆயத்தமாகி வருகிறேன்.

அனைவருக்கும் இனிய ஆயுத பூஜை, விஜயதசமி நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி,

பொர்.V.S.சம்பத்குமார்,
பொதுச் செயலாளர்

OUR REPRESENTATIONS

To

THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,

TNPDCL,

Chennai - 600 002.

Lr.No.GS/TNEBES/F1/D.15/ 2026, Dt. 24.08.2026.

Respected Sir,

Sub: Legal ligation by individual has stalled the process of Junior Engineer / Mechanical I Grade promotion for almost a decade – Aggrieved individual retired from Board's service yet legal proceedings still pending – Intervention of respected Chairman cum Managing Director solicited in clearing the legal hurdles – represented regarding.

Diploma qualified persons in Mechanical Engineering enter the Board as Technical Assistant / Mechanical just like their counter parts in Electrical discipline who enter the Board as Technical Assistant / Electrical. Even though they are quite fewer in numbers compared to Electrical discipline they occupy sizeable number of posts in Thermal Power Plant and Hydro Generating Stations.

The 1st promotion of a Technical Assistant / Mechanical is Junior Engineer / Mechanical II Grade and their 2nd promotion is Junior Engineer / Mechanical I Grade for which they have to serve a minimum period of 3 years in each category as per the Service Regulation in force.

But in reality a Technical Assistant / Mechanical doesn't get his 1st promotion of Junior Engineer / Mechanical II Grade even after serving the post for 12 years whereas their counterparts in Electrical discipline attain it within 4 to 5 years. The pathetic condition continues for Junior Engineer / Mechanical I Grade promotion also.

While less number of posts and fewer numbers of vacancies are a reason behind this slow rate of promotion, litigation and cases add to the miseries delaying the promotion process further. For kind records Junior Engineer / Mechanical I Grade promotion has not been operated for almost a decade. The last promotion for this cadre was issued on 29.01.2018 for 26 persons, since then promotions are stalled due the status quo issue in the case filed in the year 2008.

Case languishing in the Hon'ble High Court of Chennai since 2007 has taken a heavy toll on the aspirants of the Mechanical discipline stalling not only the promotion process of Junior Engineer / Mechanical II Grade and Junior Engineer / Mechanical I Grade but also Technical Assistant / Mechanical recruitment and Internal Selection including compassionate appointment.

Similar to the Electrical discipline where the Junior Engineer / Electrical II Grade is filled among Diploma Holders and Non Diploma Holders in the ratio of 3:1 the post of Junior Engineer / Mechanical II Grade promotion too is filled among Diploma Holders and Non Diploma Holders in the ratio of 3:1.

During one such occasion in filling up of Junior Engineer / Mechanical II Grade post from RWE Cadre, one aggrieved individual Thiru.V.Ramasundaram of Mettur Work shop has raised litigation disputing the seniority citing other persons belonging to Mettur Work shop at the Hon'ble High Court of Chennai during the year 2007. . The matter has been languishing in the Hon'ble High Court for 19 years.

Our Sangam has impleaded in the litigation and after much ado the Main case WP 4719 / 2007 case was closed a couple of months ago. Yet a stay in Main case WP 19651 / 2008 has not been vacated and hence the status quo continues and Board isn't able to process the promotion of Junior Engineer / Mechanical I Grade and consequently the promotions down under.

The individual Thiru.V.Ramasundaram retired from Board's service on superannuation since then more than a year ago, yet the litigation hasn't come to an end. The efforts taken up by the Personnel Administration isn't quite adequate to solve this issue.

Hence we request the intervention of the respected Chairman cum Managing Director in this matter requesting to instruct the Chief Engineer / Personnel to expedite the legal process, vacate the stay thereby clearing the hurdles for issuing Junior Engineer / Mechanical I Grade promotions and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,

(V.S.SAMPATH KUMAR)

General Secretary.

To

THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,

TNPDCL,

Chennai-600 002.

Lr.No.GS/TNEBES/F1/D. 16 / 2026, Dt. 16.09.2026

Respected Sir,

Sub: Promotion to the post of Superintending Engineer / Electrical – Particulars received - DPC to be completed & Issuing of promotions Orders - Requested - Regarding

Ref: Letter No. 11004 / A1/ A11 / 2026-2 / Dated 14.05.2026

Performance Assessment Reports and Suitability Reports were called for promotion to the post of Superintending Engineer / Electrical for the year 2026–2027 covering 103 Executive Engineers (Electrical) for vacancies up to 31.03.2027, vide the references cited above. Out of these 103 Executive Engineers, 15 have since retired, leaving 88 Engineers available for consideration.

The particulars have been fully consolidated and are currently awaiting the Departmental Promotion Committee (DPC) process. At present, more than 30 Superintending Engineer posts including crucial positions in distribution circles are vacant. Superintending Engineers play a pivotal role in managing the distribution network. Therefore, given the prevailing and forthcoming monsoon season, it is critical to fill these vital posts immediately.

Hence, we earnestly request the respected Chairman-cum-Managing Director to kindly intervene, expedite the DPC process for the Superintending Engineer / Electrical promotion panel, and issue the promotion orders at the earliest.

Thanking you, Sir,

Yours Sincerely,

(N.R.SENTHIL)

General Treasurer.

மணந்தனர் வாழ்த்துகிறோம்

மணமகன்

தெய்வத்திரு P.துரை –
நலமுடன் D. மகாலட்சுமி
தம்பதியரின் மகன்
திருநிறைச்செல்வன்
Er. D.**ஜெய்குமார்**, B.E.,
TNEB

மணமகள்

திரு B. குமார் – திருமதி K . சுஜாதா
தம்பதியரின் குமாரத்தி
திருவளர்ச்செல்வி
Dr. K.**கௌசல்யா**, MBBS.,
MM HOSPITAL
Kumar Sujatha Clinic

இருவரும் 13.09.2026 அன்று இல்லற வாழ்வில் இணைந்தனர்

மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது...

பொர். D. ஜெயக்குமார், C.A / TNEB, Joint Sec./ CDC அவர்கள்
மின்அலை வளர்ச்சி நிதியாக ரூபாய். 501/– அளித்துள்ளார், நன்றி

பொறியாளர் சங்க
உறுப்பினர்கள் அனைவருக்கும்
இனிய காந்தி ஜெயந்தி
நல்வாழ்த்துக்களை
பொறியாளர் சங்கம்
தெரிவித்துக்கொள்கிறது.



BOARD ORDERS

ABSTRACT

Energy Department To effect only domestic service connections to the houses constructed on Poromboke lands not exceeding 250 square feet buildup area excluding Water Course Poramboke, Meikkal, Mandaiveli / Meichchal Tharai Poromboke, Lands of Forest, Railway, Cantonment and Temples etc., under separate tariff category viz., Low Tension Tariff IA (3) Poramboke without obtaining 'No Objection Certificate' from the concerned officials of Government of Tamil Nadu Issued. Orders

ENERGY (A1) DEPARTMENT

G.O(Ms) No.100

Dated: 16.09.2026,
திருவள்ளுவர் ஆண்டு **2057,**
பராபவ, ஆவணி **30.**

Read: -

1. G.O.(Ms). No.97, Revenue and Disaster Management Department, dated 21.02.2025.
2. From the Additional Chief Secretary / Chairman-cum-Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited letter No.CE / Coml / SE / EE3 / AEE.2 / F.Promboke Land-ENE / D.239 / 2026, dated.13.07.2026 and 22.07.2026.

ORDER:

The Hon'ble Minister for Energy Resources and Law, Government of Tamil Nadu during discussion held on 06.07.2026, has instructed to examine the possibilities and to take necessary action in order to effect Electricity Service connection to the houses constructed on Poromboke Lands (except Water Course Poromboke land, etc.,) without obtaining "No Objection Certificate from the concerned Officials of the Government of Tamil Nadu, considering the numerous petitions/representations being received to give effect to the above request.

2. In para 98 of the Government Order first read above, regarding type of Poramboke lands, orders were issued as follows:-

No residential encroachments in the following category of lands to be regularised and no proposal for regularisation shall be sent to the Government as well: -

a. All type of Water bodies which include Marsh Land /Swamp and Back water, etc.,
b. Meikkal / Mandaveli / Poramboke, etc., Meichchal Tharal
c. Forest lands including forest Porambokes though they are not declared as Reserved Forest.
d. Cantonment areas, Railway lands, etc., belonging to Union Government.
e. Patta lands in the name of all religious institutions.
f. Temple Poramboke Lands.

3. In the letter second read above, the Chairman-cum-Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL) has requested the Government to effect only the domestic service connections to the houses constructed on Poromboke lands not exceeding 250 square feet buildup area (except Water Course Poramboke, Meikkal and Mandalveli / Meichchal Tharal Poromboke) under separate tariff category "Low Tension Tariff IA(3) Poramboke" without obtaining 'No Objection Certificate' from the concerned officials of Government of Tamil Nadu with the following conditions: -

I. To effect domestic service connections only to the house buildings constructed at the land not exceeding 250 square feet buildup area on Poromboke lands (except Water Course Poromboke, Melkkal Poromboke, Mandaiveli land which have been notified in the revenue records of the State as reflected in the official website, viz., "Tamil Nilam" of the Government of Tamil Nadu) without obtaining "No Objection Certificate from the concerned Officials of Government of Tamil Nadu.

ii. The Applicant shall furnish the following undertaking in a non-judicial Stamp paper:

"I am aware that I am liable to be evicted and for disconnection of electricity supply at any time if the lands are required by the Government and/or any dispute arises at a later date and that electricity supply given in this regard will not confer any title or rights on ownership over the land.

I am aware that the above undertaking shall not confer permanent and full right and title to the ownership over the land.

I declare that the house building for which supply requested is not located in water body, Meikkal Poromboke and Mandaiveli lands."

iii. Applicant shall file an application through online as per FORM I as specified in Tamil Nadu Electricity Distribution Code.

iv. The Applicant shall execute an indemnity bond in FORM-6 of the Appendix III of Tamil Nadu Electricity Distribution Code and also pay security deposit twice the normal rate.

v. All the applicable charges for effecting supply will be collected from the Applicant as per the Tamil Nadu Electricity Regulatory Commission Codes and Regulations.

vi. This category of Service Connection shall be classified and effected under a separate tariff category "Low Tension Tariff IA(3) Poromboke" by making necessary changes in the Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL) Low Tension Billing Software by adopting all the charges applicable for Low Tension Tariff-IA as per the prevailing tariff order in force, i.e., the tariff applicable for Low Tension Tariff-IA (3) Poromboke will be as that of existing Low Tension Tariff IA-Domestic service.

vii. Before granting electricity service connection, it shall be ensured by the Section Officer that, the house building for which supply requested is not located in any land notified as water body, Meikkal Poromboke and Mandaiveli lands in the list published in the official website, viz., 'Tamil Nilam' of the Government of Tamil Nadu.

viii. On issuance of Government Orders, the Hon'ble Tamil Nadu Electricity Regulatory Commission will be addressed in this regard for necessary amendments in Regulation 27 (12) of the Tamil Nadu Electricity Distribution Code and also for separate tariff category "Low Tension Tariff IA (3) Poromboke for such service connections.

4. The Chairman-cum-Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited has therefore requested the Government to issue orders on the above lines.

5. The Government, after careful examination of the proposal of the Tamil Nadu Power Distribution Corporation Limited, have decided to accept the same and accord permission to the Chairman-cum-Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited to effect domestic service connections only to the houses constructed on Poromboke lands not exceeding 250 square feet buildup area under a separate tariff category viz., "Low Tension Tariff IA(3) Poramboke" excluding, Water Course Poramboke, Meikkal, Mandaiveli and Meichchal Tharai Poromboke, Forest lands including forest Poramboke though they are not declared as Reserved Forest, Cantonment areas, Railway lands, etc., belonging to Union Government, Patta lands in the name of all religious institutions and Temple Poramboke Lands, which have been notified in the revenue records of the State as reflected in the official website, viz, Tamil Nilam' of the Government of Tamil Nadu, without obtaining 'No Objection Certificate' from the concerned officials of Government of Tamil Nadu, subject to the conditions / guidelines as Annexed to this Government Order.

6. Further, the Chairman-cum- Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited is directed to scrupulously follow the conditions / guidelines prescribed in the Appendix annexed to this Government Order while implementing the above scheme.

7. The Chairman-cum-Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited is also directed to send a detailed report Indicating the number of service connections effected, I.e., Taluk wise and District wise to the Government once in every three months, so as to monitor and ensure that this does not result in misuse of the facility.

(BY ORDER OF THE GOVERNOR)

ANIL MESHRAM,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

Annexure

Annexure to G.O. (Ms). No.100, Energy (A1) Department, dated 16.09.2026 regarding domestic service connection to houses constructed on certain Poromboke lands without obtaining "No Objection Certificate" from the concerned officials of Tamil Nadu.

I. To effect domestic service connections to the houses constructed at the land not exceeding 250 square feet buildup area on Poromboke lands excluding, Water Course Poramboke, Meikkal, Mandaiveli / Meichchal Tharai Poromboke, Forest lands including forest Poramboke though they are not declared as Reserved Forest, Cantonment areas, Railway lands, etc., belonging to Union Government, Patta lands in the name of all religious institutions and Temple Poramboke Lands, which have been notified in the revenue records of the State as reflected in the official website, viz, Tamil Nilam' of the Government of Tamil Nadu without obtaining 'No Objection Certificate' from the concerned official of Government of Tamil Nadu, by classifying the service connection under a separate tariff category viz. "Low Tension Tariff IA(3)-Poramboke"

ii. The Applicant shall furnish the following undertaking in a non-judicial Stamp paper: -

"I am aware that I am liable to be evicted and for disconnection of electricity supply at any time if the lands are required by the Government and / or any dispute arises at a later date and that electricity supply given in this regard will not confer any title or rights on ownership over the land.

I am aware that the above undertaking shall not confer permanent and full right and title to the ownership over the land.

I declare that the house building for which supply requested is not located in Water Course Poramboke, Meikkal and Mandaiveli / Meichchal Tharai Poromboke, etc., Forest lands including forest Poramboke though they are not declared as Reserved Forest, Cantonment areas, Railway lands, etc., belonging to Union Government, Patta lands in the name of all religious institutions and Temple Poramboke Lands."

iii. Applicant shall file an application through online as per FORM I as specified in Tamil Nadu Electricity Distribution Code.

iv. The Applicant shall execute an Indemnity Bond in FORM-6 of the Appendix III of Tamil Nadu Electricity Distribution Code and also pay security deposit twice the normal rate.

v. All the applicable charges for effecting supply will be collected from the Applicant as per the Tamil Nadu Electricity Regulatory Commission Codes and Regulations.

vi. This category of Service Connection shall be classified and effected under a separate tariff category "Low Tension Tariff IA(3) Poromboke" by making necessary changes in the Tamil Nadu Power Distribution Corporation Limited Low Tension Billing Software by adopting all the charges applicable for Low Tension Tariff-IA as per the prevailing tariff order in force, i.e., the tariff applicable for Low Tension Tariff IA(3) Poromboke will be as that of existing Low Tension Tariff IA-Domestic service.

vii. Before granting electricity service connection, it shall be ensured by the Section Officer that, the house building for which supply requested is not located in any land notified as Water Course Poramboke, Meikkal and Mandaiveli / Meichchal Tharai Poromboke, etc., Forest lands including forest Poramboke though they are not declared as Reserved Forest, Cantonment areas, Railway lands, etc., belonging to Union Government, Patta lands in the name of all religious institutions and Temple Poramboke Lands, which have been notified in the revenue records of the State as reflected in the official website, viz, 'Tamil Nilam' of the Government of Tamil Nadu.

viii. On issuance of Government Orders, the Hon'ble Tamil Nadu Electricity Regulatory Commission will be addressed in this regard for necessary amendments in Regulation 27 (12) of the Tamil Nadu Electricity Distribution Code and also for separate tariff category "Low Tension Tariff IA (3) Poromboke" for such service connections.

ANIL MESHRAM,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

Abstract

Energy Department -Budget Announcement2026-27-Introduction of new' Rooftop Solar Subsidy Scheme' in convergence with Pradhan Mantri Surya Ghar: Muft Bijli Yojana -State Subsidy support for domestic consumers -Approved -Orders - Issued.

G.O.(Ms)No.102 **Energy(EI)Department**

Dated:19.09.2026
பரபபவ வருடம் புரட்டாசி 2
திருவள்ளுவர் ஆண்டு 2057

Read:

1. Hon'ble Finance Minister's Budget Speech on 0S.08.2026 (Paragraph 98).
2. From the Chairman, Tamil Nadu Green Energy Corporation Limited Lr. No. CE/NCES/SE/SP/EE/ SP/AEE2/F. RTS Subsidy/ D.1030/ 2026, dated 29.08.2026.

ORDER:

During the Budget Session 2026-27, the Hon'ble Minister (Finance, Planning and Development) has made the following Announcement:-

"The Government is actively implementing its energy strategy witha focus on renewable energy. A new 'Rooftop Solar Subsidy Scheme' will be introduced in convergence with the 'Pradhan Mantri Surya Ghar Muft Bijli Yojana'. Under this scheme, a subsidy of upto Rs. 1 lakh will be provided to domestic consumers for installing solar panels, significantly reducing their electricity bills and supporting the transition to renewable energy. An amount of Rs. 50 crore is allocated to implement this scheme. A system for installing smart meters will also be introduced for all consumers in Chennai city, as well as for 50 lakh industrial and commercial consumers across other parts of the State".

2. In the letter 2nd read above, the Chairman, Tamil Nadu Green Energy Corporation Limited has sent a proposal to facilitate installation of '1 Lakh rooftop Solar Systems' across Tamil Nadu in the premises of domestic consumers by 31.03.2027 for which the State subsidy can be extended to eligible domestic consumers, subject to successful installation, commissioning and verification of rooftop solar systems, until the benefit is availed by 1 lakh consumers. He has stated that this subsidy will be an additional subsidy over and above the Central Financial Assistance available under the Pradhan Mantri Surya Ghar: Muft Bijli Yojana and designed the structure of the proposed State subsidy as follows:

SI.No.	Rooftop Solar Capacity	Proposed State Subsidy
1	Upto1kW	Rs.5,000
2	Upto2kW	Rs.10,000
3	3kW and above	Rs.22,000

3. In order to ensure effective implementation of the Scheme, consumer facilitation, monitoring, subsidy disbursement and submission of scheme-related reports the Chairman, Tamil Nadu Green Energy Corporation Limited has proposed the following roles and responsibilities:

I) Tamil Nadu Green Energy Corporation Limited(TNGECL):

TNGECL may act as the nodal agency for coordination of Government communications between the Government of India and the Government of Tamil Nadu, monitoring of the Scheme and review of the progress of RTS installations under the Scheme.

ii) Tamil Nadu Energy Development Agency(TEDA):

TEDA may be designated as the Programme Management Agency (PMA) for execution of the proposed State Rooftop Solar Subsidy Scheme. TEDA has earlier handled State subsidy disbursement under the Capital Investment Subsidy Scheme and has the requisite experience in processing beneficiary-related details.

4 The Chairman, Tamil Nadu Green Energy Corporation Limited has also suggested to utilize the services of Tamil Nadu Energy Development Agency (TEDA) for facilitating the transfer/export of beneficiary credentials and other required details, as TEDA is already having the necessary Integrated Financial and Human Resources Management System (IFHRMS) credentials. TEDA will upload the beneficiary domestic

consumer details through IFHRMS credentials and Government of Tamil Nadu to initiate subsidy payment to the consumer by DBT mode in coordination with TEDA. Further, he has suggested to provide access to the TNGECL in the concerned portal for tracking and viewing beneficiary details, subsidy eligibility, subsidy sanctioned and subsidy disbursed, thereby facilitating effective monitoring and avoiding Duplication of subsidy claims, and to address consumer grievances if any.

5.The Chairman, Tamil Nadu Green Energy Corporation Limited has therefore requested the Government to accord approval and issue necessary Government Order for introduction and implementation of the Rooftop Solar Subsidy Scheme to domestic consumers in c·onvergence with the Pradhan Mantri Surya Ghar: Muft Bijli Yojana as follows:

(I) Sanction and disbursement of State subsidy to 1Lakh consumers (Registered from 05.08.2026 in PM Surya Ghar portal), on receipt of consumer data from Ministry of New and Renewable Energy (MNRE).

(ii) Sanction of Rs.50 Crore for implementing the aforesaid scheme and release of funds based on actual subsidy requirement.

(iii) Designation of TNGECL as the nodal agency for coordination, monitoring and review.

(iv) Utilisation of the services of TEDA as Programme Management Agency, pending merger of TEDA with TNGECL.

(v) Utilisation of TEDA's IFHRMS-related infrastructure/ credentials to upload the Consumer data received in the IFHRMS portal and State Government to release the subsidy to the consumer by DBT mode in co-ordination with TEDA.

(vi) To provide access to TNGECL portal for tracking beneficiary details and status of State subsidy disbursement by the Government of Tamil Nadu.

6. The Government after careful examination of the proposal of the Chairman, Tamil Nadu Green Energy Corporation Limited have decided to accept thesame and accord sanction for the following

(i) Sanction and disbursement of State subsidy to 1 Lakh consumers (Registered from 05.08.2026 in PM Surya Ghar portal), on receipt of consumer data from Ministry of New and Renewable Energy (MNRE).

(ii) Sanction of Rs. 50 Crore (Rupees Fifty Crore Only) for implementing the aforesaid scheme and release of funds based on actual subsidy requirement.

(iii) Designation of TNGECL as the nodal agency for coordination, monitoring and review.

(iv) Utilisation of the services of TEDA as Programme Management Agency, pending merger of TEDA with TNGECL.

(v) Utilisation of TEDA[1]s IFHRMS- related infrastructure/credentials to upload the Consumer data received in the IFHRMS portal and State Government to release the subsidy to the consumer by DBT mode in co-ordination with TEDA.

7. Necessary fund of Rs.50,00,00,000/- have been provided in R.B.E 2026-2027, under the new Head of account opened under the Demand No. 14-02.

8. The Expenditure sanctioned at the para 6 above shall be debited to the following new Head of Account created under Demand No. 14-02:-

"2810-00NEW AND RENEWABLE ENERGY. 105-Supporting Programme - State's Expenditure - AA Installation of Household Rooftop Solar Subsidy Scheme-309 Grants-in-aid -03 Grants for Specific Schemes"

(IFHRMSDPCode281000105AA30903)

9. The Chairman, Tamil Nadu Green Energy Corporation Limited is directed to implement the scheme in full swing and cover as many beneficiaries as possible of all classes. If additional State Government component is required, it may be included later, depending on the progress of the scheme.

10.The Chief Electrical Inspector is the Estimating, Reconciling and Controlling Authority for the new head of account opened as at para 8 above.

11. This order issues with the concurrence of Finance Department vide its e.file No.5886/ Infra-II/2026dated:19.09.2026.

(By Order of the Governor)

ANILMESHRAM,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

யானைக்கு பாகனும் இல்லை அங்குசமும் இல்லை

மின் வாரியத்தின் நுழைவாயிலாகவும், மின் பயனீட்டாளர்களின் முதல் முகமாகவும் காண்பது பிரிவு அலுவலகங்களே. ஆனால் பிரிவு அலுவலகங்களிலோ பணியாளர்களே இல்லாத சூழ்நிலையும், அந்தந்த வேலைப்பளுவுக்குள்ள பணிகளை செய்வதற்கு தகுதியான பணியாளர்கள் இல்லாத நிலையில், இன்று பிரிவுப் பொறியாளர்களை தமிழ்நாடு மின்சார வாரியம் மிகப்பெரிய சவாலுக்கு தள்ளி இருக்கிறது.

மின்வாரிய நிர்வாகம் மேற்படி சூழ்நிலையை சரிசெய்ய தற்காலிக ஏற்பாடாக களப்பணியாளர்களை மட்டும் ஒப்பந்ததாரர்கள் மூலம் பிரிவு அலுவலகங்களுக்கு குறைந்தபட்சமாக 6 பணியாளர் முதல் சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு அதிகபட்சமாக 30 பணியாளர்கள் வரை பணியமர்த்திக்கொள்ள அனுமதி வழங்கி உள்ளது. இதிலிருந்தே சென்னை பகுதிகள் எவ்வாறு ஆள் பற்றக்குறையால் தத்தளிக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால் கள யதார்த்தம் தலைகீழாக உள்ளது. பெருநகரமான சென்னையில் சமூக வலைதளங்களின் வாயிலாக பெறப்படும் புகார்கள் அதிகமாக இருந்ததும், பல புகார்கள் மீடியாக்கள் வாயிலாக பரபரப்பான செய்திகளானதும், இதே வேளையில் கிராமப்புற நுகர்வோர்களின் பெரும்பகுதியினர் கொண்டுள்ள சகிப்புத்தன்மையுமே, இந்த பணியாளர் எண்ணிக்கை வேறுபாட்டுக்கான காரணமாகவும் இருக்க முடியும்.

இவற்றையெல்லாம் தாண்டி, ஒவ்வொரு முறையும் பிரிவு அலுவலகங்களுக்கு இந்த குறைந்தபட்ச பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் இறுதி செய்து கொள்ளவும், அதே உத்தரவிலே ஒப்பந்தங்களை தமிழ்நாடு டெண்டர் விதிமுறைகளை பின்பற்றி செய்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. டெண்டர் விதிகளின்படி ஒப்பந்தங்களை கோர 15 தினங்களும், அவற்றை ஏழு தினங்களுக்குட்பட்டதாக்க அடுத்த மேலதிகாரியின் அனுமதியோடு ஏழு தினங்களுக்குள் டெண்டர் அனுப்பி ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று இறுதி செய்ய வேண்டிய நிலை உள்ளது.

இதனால் ஒவ்வொரு முறையும் ஒப்பந்ததாரர்கள்வாயிலாக பணியாளர் பெறும் முறை குறைந்தபட்சமாக ஏழு முதல் 10 நாட்கள் இடைவெளி எற்பட்டு மறு ஒப்பந்தத்தை இறுதி செய்ய காலதாமதம் ஏற்படுகிறது. இந்த இடைபட்ட நாட்களிலே பிரிவு அலுவலர் எவ்வித பணியையும் செய்ய இயலாமல் முடங்கிப் போக வேண்டிய ஒரு கட்டாய நிலைக்கு தள்ளப்படுகிறார். ஒப்பந்த ஊழியரையும்எந்த பணிக்கும் அவரால் அழைக்க இயலாத நிலையும், அந்த காலகட்டங்களிலே ஏற்படக்கூடிய அனைத்து பிரிவு அலுவலக பணிகளையும் செய்வதறியாது ஒரு இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர். மேலும் பல அலுவலகங்களிலே இந்த நடைமுறைகள் காகித வடிவிலேயே நின்று விடுகின்றன.

கிட்டத்தட்ட டிசம்பர் மாதத்தில் இருந்து இந்த தற்காலிக நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தாலும் இதுவரை பணியாளர்களை நியமிக்க எவ்வித முன்னேற்றமான நடவடிக்கையும் மின்வாரிய நிர்வாகம் எடுக்காதது மிகப்பெரிய ஒரு அசாதாரண நிலையை கடை மட்டத்திலே ஏற்படுத்தி இருக்கிறது என்பது தான் நிதர்சனமான உண்மை. அதே போல மின்கணக்கீடு பணிகளையும் செய்வதற்கு களத்திலே கணக்கிட்டாளர்கள் இல்லாத நிலை தான் இருந்து வருகிறது.

அதிலும் விசித்திரமாக ஒய்வு பெற்ற கணக்குபிரிவு அலுவலர்களை மட்டுமே அவுட்சோர்சிங் செய்ய வேண்டும் என்ற விதிமுறையால், வரிகளால் விவரிக்க இயலாத நடைமுறை சிக்கல்களை பிரிவுப் பொறியாளர்கள் சந்தித்து வருகின்றனர். எனவே ஒரு மின்தடை ஏற்பட்டால் அந்த மின்தடையை நீக்குவதற்கும் பணியாளர்கள் இல்லை.மின் இணைப்புகள் வாயிலாக கொடுக்கப்பட்ட மின்சாரத்தை அளவீடு செய்து அவற்றை வருவாயாக பெருக்கக்கூடிய கணக்கீட்டாளர் பணியிடமும் காலியாக இருந்து வரும் வகையில் இந்த இரண்டு கடைநிலைப் பணியாளர்களுமே இல்லாமல் ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்களையும் ஓய்வு பெற்ற பணியாளர்களையும் இந்த பணிகளுக்கு ஈடுபடுத்துவதால் தான் களப்பணிகளில் மின்விபத்துகளும் மின் கணக்கீடுகளில் மிகப்பெரிய குழப்பங்கள் ஏற்பட்டு அவற்றை சரி செய்யாத முடியாத நிலைக்கு தள்ளிவிடுகின்றன.

எனவே தமிழக அரசும் மின்வாரிய நிர்வாகமும் பணியாளர்கள் நியமனத்தில் கவனம் செலுத்தி விரைந்து எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலங்களை கவனத்தில் கொண்டு கடைநிலைப் பணியிடங்களை நிரப்பி Men, Money, Material என்ற MMM–களை வழங்கி பிரிவுப் பொறியாளர்களின் பணிச்சுமையை குறைக்கவும் மின்பயனீட்டாளர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்குமா? என்பதே மிகப்பெரிய கேள்வியாக உள்ளது.

பொர். க.முத்துக்கிருஷ்ணன்
செயலாளர்/ வெளியீடு

டெங்கு காய்ச்சல் – விழிப்புணர்வுடன் தடுப்போம்

மழைக்காலம் தொடங்கும் காலங்களில் ஆங்காங்கே தேங்கும் தண்ணீர் மற்றும் அதன் காரணமாக அதிகரிக்கும் கொசுக்களின் எண்ணிக்கை, டெங்கு காய்ச்சல் குறித்த அச்சத்தை பொதுமக்களிடையே அதிகரிக்கிறது. டெங்கு என்பது டெங்கு வைரஸால் ஏற்படும் ஒரு வைரஸ் தொற்று நோயாகும். பாதிக்கப்பட்ட ஏடிஸ் (Aedes) வகையைச் சேர்ந்த பெண் கொசுக்கள் கடிப்பதன் மூலம் இந்த நோய் மனிதர்களுக்குப் பரவுகிறது. குறிப்பாக, ஏடிஸ் ஈஜிப்டை (Aedes aegypti) கொசு டெங்கு பரவலில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான மக்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுகின்றனர். நகரமயமாக்கல், காலநிலை மாற்றம் மற்றும் அதிகரித்து வரும் மனித நடமாட்டம் ஆகியவை டெங்கு நோய் வேகமாகப் பரவுவதற்கு முக்கிய காரணிகளாகக் கருதப்படுகின்றன. இருப்பினும், டெங்குவைத் தடுக்கவும், அதன் பரவலைக் கட்டுப்படுத்தவும் முடியும் என்பது நம்பிக்கையளிக்கும் செய்தியாகும். இதற்கு தனிநபர்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த சமூகத்திலும் டெங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகிறது.

டெங்குவை பற்றி தெரிந்து கொள்வோம் :

ஏடிஸ் (Aedes) கொசு கடிப்பதன் மூலம் பரவும் டெங்கு வைரஸ்தான் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்துகிறது. டெங்கு வைரஸில் நான்கு வெவ்வேறு செரோடைப்கள் உள்ளன. ஒருவருக்கு ஒரு செரோடைப் மூலம் டெங்கு தொற்று ஏற்பட்ட பிறகு, அந்த குறிப்பிட்ட வகைக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தி உருவாகலாம். ஆனால் மற்ற செரோடைப்களுக்கு எதிராக அதே அளவிலான பாதுகாப்பு கிடைக்காது. இதன் காரணமாக ஒருவருக்கு வாழ்நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட முறை டெங்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் :

டெங்கு கொசு கடித்த 4 முதல் 10 நாட்களுக்குப் பிறகு இதன் அறிகுறிகள் தோன்றத் தொடங்கும்:

- திடீரென உடல் வெப்பநிலை 104°F (40°C) வரை உயரும்.
- முன்நெற்றிப் பகுதியில் தாங்க முடியாத தலைவலி இருக்கும்.
- கண் விழிகளுக்குப் பின்னால் கடுமையான வலி ஏற்படும்.
- தசை, எலும்பு மற்றும் மூட்டுகளில் கடுமையான வலி உண்டாகும்.
- உடலில் சிவப்பு நிறத் தடிப்புகள் தோன்றும்.
- சாப்பிடுவதில் விருப்பமின்மை, குமட்டல் மற்றும் வாந்தி உணர்வு இருக்கும்.
- கடுமையான பலவீனம் மற்றும் சோர்வு ஏற்படும்.

தடுக்கும் வழிகள் :

- ஏடிஸ் கொசுக்கள் அமைதியான நீரில் இனப்பெருக்கம் செய்கின்றன. பூந்தொட்டிகள், பழைய டயர்கள் மற்றும் திறந்த கொள்கலன்கள் போன்ற தண்ணீரைச் சேகரிக்கக்கூடிய எதையும் அகற்றுவதன் மூலம் கொசுக்கள் பெருகும் இடங்களை வெகுவாகக் குறைக்கலாம்.
- குறிப்பாக கொசுக்கள் அதிகம் உள்ள காலங்களில், நீங்கள் தூங்கும் போது கொசுவலைகளைப் பயன்படுத்துவதும், வெளிப்படும் தோலை விரட்டிகளால் தேய்ப்பதும் கொசுக் கடியைத் தவிர்க்க உதவும்.
- காலுறைகள், நீண்ட கை சட்டைகள் மற்றும் நீண்ட பேன்ட் ஆகியவை கொசு கடிக்கு எதிராக மற்றொரு அடுக்கு பாதுகாப்பைக் கொடுக்கும்.
- கழிவுகளை முறையாக அகற்றி சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் கொசு உற்பத்தியாகும் இடங்களை குறைக்கலாம்.

பொதுப் பகுதிகளுக்கான சுற்றுப்புறத் தூய்மைப் பிரச்சாரங்களில் பங்கேற்பதன் மூலம் கொசுக்கள் பெருகும் இடங்களைக் கணிசமாகக் குறைக்கலாம்.

நமது பங்களிப்பு :

டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது தனிநபர்களின் பொறுப்பு மட்டுமல்ல. பொதுமக்கள், மருத்துவ நிபுணர்கள், சமூக அமைப்புகள் மற்றும் அரசு சுகாதாரத் துறைகள் ஆகியவை இணைந்து செயல்பட வேண்டியது அவசியம். உள்ளூர் சுகாதார அதிகாரிகளும் பொதுமக்களும் இணைந்து செயல்திட்டங்களை உருவாக்கி, கொசுக்கள் பெருகும் இடங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

டெங்கு பாதிப்பு அதிகரிக்கும் காலங்களில் பொதுமக்கள் விழிப்புடன் இருந்து, அறிகுறிகளை அலட்சியம் செய்யாமல் உரிய மருத்துவ ஆலோசனையைப் பெறுவதும் முக்கியமானதாகும். அதேபோல், தங்கள் வீடு மட்டுமின்றி சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருப்பதில் ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும்.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவோம் :

தனிநபர்கள் தங்கள் வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்துக்கொள்வதுடன், கொசுக்கள் பெருகும் இடங்களை அகற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும். பொதுமக்கள், மருத்துவத் துறை மற்றும் அரசு அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்தி, தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் டெங்கு காய்ச்சலின் பாதிப்புகளை கணிசமாகக் குறைத்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும்.

டெங்குவுக்கு எதிரான மிகப்பெரும் ஆயுதம் ... நம் தூய்மையும், நம் விழிப்புணர்வுமே!

பொர். **அமர்நாத் சுப்பிரமணி**, மின் அலை ஆசிரியர் குழு உறுப்பினர்

நேபாளத்தில் நடந்தது என்ன?

26.08.2026 புதன்கிழமை காலை 8.37 மணிக்கு நேபாளம் – திபெத் எல்லையில் உள்ள லாங்டாங் தேசியப் பூங்கா அமைந்திருக்கும் பகுதியில் கடல் அளவிற்கு 5200 மீட்டர் உயரத்தில் இருந்து மாபெரும் பனிப்பாறைகள் அடங்கிய உறை நிலையில் இருக்கும் ஏரி ஒன்றின் தென் பகுதி பிளவுற்றது. சுமார் 2000 அடி அகலம் கொண்ட பனிப்பாறைகள் பிளவுற்றது.

அதாவது 4 முதல் 6 மில்லியன் க்யூபிக் மீட்டர் அளவு கொண்ட பனிப்பாறைகள் நொடிப்பொழுதுக்கும் குறைவான தருணத்தில் தனது தாய் பாறையில் இருந்து முறிந்து அப்படியே 1200 மீட்டர் கீழே சமவெளியில் விழுந்தது. இந்தப் பிளவால் ஏற்பட்ட பூமியின் அதிர்வு ரிக்டர் அளவுகளில் 4.4 முதல் 5.2 ரிக்டர் என்றளவில் பதிவு செய்யப்பட்டிருப்பதால் அந்தப் பிளவின் வீரியத்தை அறிய முடியும்.

தன்னகத்தே 3.5 முதல் 5.5 மில்லியன் எடையைக் கொண்டு ஒரு மாபெரும் பனிப்பாறை 4000 அடி கீழ் நோக்கி புவி ஈர்ப்பு விசையின் விளைவால் விழும் போது அதன் வேகம் மணிக்கு 300 முதல் 450 கிலோமீட்டர் (புல்லட் ட்ரெயினின் வேகம் / டேக் ஆஃப் ஆகும் போது விமானத்தின் வேகம்) என்ற வேகத்தில் இருக்கும்.

இத்தகைய பெரிய வீழ்ச்சி நடக்கும் போது அந்த இடத்தில் உருவான ஆற்றல் விளைவை டிஎன்டி கொண்டு விளக்கினால் 10 முதல் 15 கிலோ டன் டிஎன்டி ஆற்றல் வெளிப்பட்டிருக்கும்.

இது ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அணுகுண்டின் ஆற்றலுக்கு ஒப்பானது. மேலிருந்து கீழிறங்கிய மாபெரும் புல் டோசர் போல பனிப்பாறை கீழே விழ , அந்த இடத்தில் இருக்கும் மரம் செடி கொடி மண் என்று அனைத்தையும் ஒரு சேர ஒன்றாக்கி பள்ளம் நோக்கி கீழிறங்கத் துவங்கியது. இதைத் தான் பனிப்பாறை ஏரி வெடிப்பினால் ஏற்படும் திடீர் வெள்ளப்பெருக்கு என்று அறிகிறோம்.

சுருக்கமாக GLOF (GLACIER LAKE OUTBURST FLOOD)

இதில் என்ன சிக்கல் என்றால் கீழே விழுந்த பனிப்பாறைக்குள் 4 முதல் 6 பில்லியன் லிட்டர் நீர் இருந்திருக்கும். இவற்றுடன் சேர்ந்து மண், மரம் என்று ஒன்று சேர்ந்து, சேறும் சகதியுமான ஒரு சுனாமி மேலிருந்து கீழ் நோக்கி வேகமாக வருவதாகக் கற்பனை செய்யலாம்.

இந்த சகதிச் சுனாமி உருவான இடத்தில் இருந்து லெண்டே கோலா மற்றும் போட்டிகோஷி ஆறுகளைத் தனது வழித்தடமாகக் கொண்டு சுமார் நாற்பது கிலோமீட்டர் பயணித்து தனது வழிநெடுக உள்ள கிராமங்களை முழுமையாக கபளீகரம் செய்து விட்டது.

பனிப்பாறை கீழ் விழுந்த இடத்தில் இருந்து நாற்பது கிலோமீட்டர் தூரத்தை அடைய எடுத்துக் கொண்ட நேரம் – அரை மணிநேரம் முதல் 40 நிமிடங்கள் வரை மட்டுமே. இவ்வளவு குறைவான நேரத்தில் மீட்புப் பணிகள் அல்லது தப்பித்து ஓடுவது மனிதனால் இயன்ற சாத்தியக்கூறுகளுக்கு அப்பாற்பட்டதாகத் தோன்றுகிறது.

எதனால் இது நடந்திருக்கும்?

பனிப்பாறை நிலவும் பகுதிகளில் வெப்பம் அதிகமாக இருப்பது பனிப்பாறைகளின் உள்பகுதிகளை வெப்பமாக்கி அவற்றுக்குள் நீரோட்டத்தை உருவாக்கி பனிப்பாறைகளின் பலத்தை சீர்குலைக்கின்றன. இதன் விளைவாக உள்ளிருந்து பிளவு தோன்றுகிறது. இத்தகைய பிளவுகள் சிறிது சிறிதாக பெரிதாகி , தாய் பாறையில் இருந்து சிதறி கீழே விழும் போது இத்தகைய பெரிய வெள்ளப்பெருக்காக உருவாகின்றன.

இன்னும் 47 பனிப்பாறை ஏரிகள் இதே நிலையில் GLOF அபாயத்துடன் நேபாளத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை அனைத்தும் இயற்கை நிகழ்வுகளே ஆயினும் மனிதர்களாகிய நாம் பனிப்பாறை ஏரிகள் உருகி வரும் வழிகளில் நமது இருப்புகளை அதிகரித்திருப்பது, நிகழ்வின் வீரியத்தையும் பாதிப்புகளையும் அதிகரித்துக் காட்டுகிறது.

இன்னும் நம் செயற்கைக் கோள்கள் மற்றும் பனிப்பாறை ஆராய்ச்சிகள் கொண்டு உடைந்து முறியும் நிலையில் இருக்கும் பனிப்பாறைகள் குறித்து ஆராய்ச்சிகளை முடுக்கி விட வேண்டும்.

நகரமயமாக்கலை முன் திட்டத்துடனும் இயற்கையையும் மனிதர்களையும் பாதிக்காத அளவில் சமத்தன்மையுடன் அணுகினால் நல்லது. பனிப்பாறை முறிவு ஏற்படப் போவதை சில நாட்கள் முதல் சில மணிநேரங்கள் முன்னமே கண்டறிந்து நமக்கு சிக்னல் தரும் சாதனங்கள் தேவை.

எத்தனை பெரிய வித்தை கொண்டும் வெறும் 30 நிமிடங்களில் கீழறிங்கி வரும் பெரிய சகதிச் சுனாமியில் இருந்து மக்கள் தங்களைக் காத்துக் கொள்வது இயலாத காரியமாகும். இந்த நிகழ்வில் உயிர் நீத்தோரை எண்ணி மனம் கவலை கொள்கிறது வாழ்வின் நிலையில்லாமை குறித்த சிந்தனை ஓங்கி மறுமுறை அறைந்து விட்டுச் செல்கிறது.

சொந்தங்களை இழந்து வாடும் அனைத்து உள்ளங்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்கள்...

இணை உரிமம் – Parallel Licensing

மின் விநியோகத் துறையில் போட்டியை அறிமுகப்படுத்துவதை MoP–ன் உத்தேச கட்டமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெரும்பாலான மாநிலங்களில் மின் விநியோகம் ஒரு முற்றுரிமையாகவே (monopoly) தொடர்கிறது; பொதுவாக மாநில மின் வாரியங்களே ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள அனைத்து நுகர்வோருக்கும் சேவை செய்கின்றன. இருப்பினும், செயல்பாட்டுத் திறமையின்மை, அதிக தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகள், மற்றும் தொடரும் நிதிச் சுமை ஆகியவை இத்துறையைப் தொடர்ந்து பாதிக்கின்றன. 2024–25 நிதியாண்டில், அனைத்து இந்திய அளவில் ஈட்டு அடிப்படையில் (accrual basis) மாநில மின் வாரியங்கள் ஒட்டுமொத்தமாக ரூ.27.01 பில்லியன் நிகர லாபத்தைப் பதிவு செய்துள்ள போதிலும், மாநில அரசுக்குச் சொந்தமான மின் வாரியங்கள் ரூ.94.36 பில்லியன் இழப்பைப் பதிவு செய்துள்ளன.

இணை உரிமம் (parallel licensing) மூலம் மின் விநியோகத்தில் அதிக போட்டியை ஏற்படுத்துவது, மாநில மின் வாரியங்களின் செயல்திறனையும் சேவைத் தரத்தையும் மேம்படுத்தும். 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 14, ஒரே பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட உரிமதாரர்களுக்கு விநியோக உரிமங்களை வழங்க மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களை அனுமதிக்கிறது. இருப்பினும், ஒவ்வொரு உரிமதாரரும் தனித்தனியே சொந்த விநியோக வலையமைப்பை நிறுவ வேண்டியிருந்தது. இந்த கூடுதல் அல்லது இரட்டிப்பு (duplication) வலையமைப்பு தவிர்க்க முடியாத செலவுகளுக்கும் வழிவகுக்கும். அக்டோபர் 2025 இல், உத்தேச மின்சாரத் (திருத்தச்) மசோதா, 2025 மூலம் அரசாங்கம் இதை நிவர்த்தி செய்ய முயன்றது. மற்றொரு மின் வாரியத்தின் ஏற்கனவே உள்ள வலையமைப்பைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் விநியோக உரிமதாரர்கள் ஒரே பகுதியில் செயல்பட இந்த மசோதா வழிவகை செய்தது. இதன் மூலம் ஏற்கனவே உள்ள உள்கட்டமைப்பின் உகந்த பயன்பாட்டை உறுதிசெய்து மூலதனச் செலவைக் குறைக்க முடியும். இதற்கிடையில், சம்பந்தப்பட்ட மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களால் (SERCs) நிர்ணயிக்கப்படும் வீலிங் கட்டணங்களைச் செலுத்தி, ஒரு விநியோக உரிமதாரர் தனது வழங்கல் பகுதியில் உள்ள மற்ற உரிமதாரர்களுக்குத் தனது வலையமைப்பில் பாரபட்சமற்ற திறந்த அணுகலை வழங்க வேண்டும் என்று 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 42 கோருகிறது.

ஜூலை 2026 இல், மின் அமைச்சகத்தின் (MoP) ஆலோசனைக் குழு உத்தேச இணை உரிமக் கட்டமைப்பைப் பற்றி விவாதித்தது. உத்தேசக் கட்டமைப்பின்படி, ஏற்கனவே உள்ள விநியோக உரிமதாரர்கள் தங்களது வலையமைப்புகளுக்குச் சொந்தக்காரர்களாகவும், அவற்றை இயக்கிப் பராமரிப்பவர்களாகவும் தொடர்வார்கள் என்றும், அதே நேரத்தில் புதிய உரிமதாரர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட வீலிங் கட்டணத்தைச் செலுத்தி ஏற்கனவே உள்ள வலையமைப்புகளை அணுகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், சம்பந்தப்பட்ட SERC–களால் அனுமதிக்கப்படும் இடங்களில் புதிய உரிமதாரர்கள் தங்கள் சொந்த வலையமைப்பை உருவாக்கும் விருப்பத்தைத் தக்க வைத்துக் கொள்ளலாம். மேலும், லாபம் தரும் நுகர்வோருக்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்ட மின் விநியோகம் செய்வதைத் தடுப்பதற்காக, அனைத்து விநியோக உரிமதாரர்களும் மின்சாரச் சட்டத்தின் கீழ் உலகளாவிய சேவைப் பொறுப்புடன் (universal service obligation) பிணைக்கப்பட்டிருப்பார்கள் என்றும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

கடந்த சில மாதங்களாக இணை உரிமம் சில முன்னேற்றங்களைப் பெற்றுள்ளது, இருப்பினும் பரவலான பயன்பாட்டுக்கான சவால்களும் தடைகளும் இன்னும் தொடர்கின்றன.

சமீபத்திய மற்றொரு வளர்ச்சியாக, நொய்டா செக்டார் 62–ல் உள்ள தரவு மையப் பூங்காவிற்காக அதானி எனர்ஜி சொல்யூஷன்ஸ் லிமிடெட் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது. அதானி குழும நிறுவனமான டிசி டெவலப்மென்ட் நொய்டா லிமிடெட் மூலமாக இப்பூங்கா மேம்படுத்தப்பட்டு வருகிறது, மேலும் இது தற்போது பச்சிமாஞ்சல் வித்ரன் நிகாம் லிமிடெட்டின் விநியோகப் பகுதிக்குள் வருகிறது. ஆகஸ்ட் 2026 இல், உத்தரப்பிரதேச மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இந்த விண்ணப்பத்தைப் பொது ஆலோசனைக் கட்டத்திற்குக் கொண்டு சென்றது.

பெரிய அளவிலான புதிய மின் தேவைகள் மற்றும் தரவு மையங்கள் போன்ற அதிக வருவாய் தரும் நுகர்வோர் பிரிவுகளுக்கு இணை உரிமம் எவ்வாறு தீவிரமாகப் பரிசீலிக்கப்படுகிறது என்பதை இந்த முன்மொழிவுகள் காட்டுகின்றன. இதே போன்றதொரு முன்னெடுப்பாக, விசாகப்பட்டினத்திற்கு அருகில் தான் உருவாக்கும் 1 GW செயற்கை நுண்ணறிவு தரவு மைய மையத்திற்காக மின்சாரத்தை நேரடியாகப் பெறவும் விநியோகிக்கவும் கூகுள் நிறுவனம் ஆந்திரப் பிரதேசத்தில் ஒரு கருதப்பட்ட (deemed) விநியோக உரிமத்தைப் பெற்றுள்ளது.

முக்கிய சவால்கள்

இந்த வேகம் அதிகரித்து வந்தாலும், இணை உரிமத்திற்கான விண்ணப்பங்கள் அதிகரிப்பது தற்போதைய பயன்பாட்டு நிறுவனங்கள், ஊழியர்கள் மற்றும் மின் துறை அமைப்புகளிடமிருந்து எதிர்ப்பைத் தூண்டியுள்ளது. மும்பையில் கூட பல ஆண்டுகளாக இக்கட்டமைப்பு செயல்பாட்டில் இருந்தாலும், அங்கு செயல்பாட்டுச் சவால்கள் இன்னும் தொடர்கின்றன. பகிரப்பட்ட வலையமைப்புகளுக்கான உத்தேசக் கட்டமைப்பின் கீழும் இச்சவால்களில் பல தொடரக்கூடும்.

லாபம் தரும் நுகர்வோர் மற்றும் அடர்த்தியான நகர்ப்புறங்களை மட்டுமே தேர்ந்தெடுத்துச் சேவை செய்யும் போக்கு (Cherry-picking) மிகப்பெரிய கவலைகளில் ஒன்றாகும். இது குறுக்கு–மானியக் கட்டமைப்பைச் சிதைத்து, தற்போதைய மின் வாரியத்தின் வருவாயைக் குறைக்கக்கூடும். ஹரியானாவில் லெவன் பவரின் முன்மொழிவு ஒரு பெரிய சர்ச்சையாக மாறியுள்ளமை இதற்குச் சான்றாகும். அதிக கட்டணம் செலுத்தும் நுகர்வோரை இழப்பது கடுமையான நிதிச் சிக்கல்களை ஏற்படுத்தலாம்; ஏனெனில், மின் வாரியங்கள் தொடர்ந்து மானிய விலையில் விவசாய மற்றும் உள்நாட்டு நுகர்வோருக்குச் சேவை ஆற்ற வேண்டியிருக்கும்.

தற்போதைய மின் வாரியங்கள் தங்களது வழக்கமான நுகர்வோர் தளத்தின் அடிப்படையில் விநியோக வலையமைப்புகள், துணை மின் நிலையங்கள் மற்றும் மின் கொள்முதல்களில் குறிப்பிடத்தக்க முதலீடுகளைச் செய்துள்ளன. புதிய உரிமதாரர்களுக்கு நுகர்வோர் இடம்பெயர்ந்தால், இந்தச் சொத்துக்களும் ஒப்பந்தம் செய்யப்பட்ட மின் திறனும் பயன்பாடற்றதாக மாறக்கூடும். கூடுதலாக, சில நுகர்வோர் வேறு நிறுவனத்திற்கு மாறினாலும், ஏற்கனவே உள்ள மின் கொள்முதல் ஒப்பந்தங்களின் (PPAs) கீழ் மின் வாரியங்கள் நிலையான கட்டணங்களைச் செலுத்த வேண்டிய கட்டாயம் தொடரலாம். பல உரிமதாரர்களிடையே குறுக்கு–மானியங்களின் பங்கீடு மற்றும் வருவாய் இழப்பு, திறன் பயன்பாடின்மை மற்றும் ஏற்கனவே உள்ள ஒழுங்குமுறை சொத்துக்களை மீட்டெடுத்தல் போன்றவற்றுக்கான நடைமுறைகளை ஒழுங்குமுறை கட்டமைப்பு தெளிவாகக் குறிப்பிடவில்லை. இந்தச் செலவுகளின் சுமை இறுதியில் புதிய நிறுவனங்களுக்கு மாறாத சாதாரண நுகர்வோர் மீதே விழக்கூடும்.

பல உரிமதாரர்கள் செயல்பாட்டுக்கு வரும்போது அது மின் கொள்முதல் திட்டமிடல் மற்றும் வளப் போதுமான மதிப்பீட்டைச் சிக்கலாக்கலாம். முறையான ஒருங்கிணைப்பு இல்லாதது மின்சாரத்தை அதிகமாகக் கொள்முதல் செய்வதற்கோ அல்லது அதிக செலவு கொண்ட குறுகிய கால கொள்முதல்களைச் சார்ந்திருப்பதற்கோ வழிவகுக்கலாம். பகிரப்பட்ட வலையமைப்புகள் மூலம் இச்சிக்கலைத் தீர்க்க உத்தேச மசோதா முயன்றாலும், உரிமதாரர்கள் தொடர்ந்து செலவு–பிளஸ் (cost-plus) கட்டமைப்பின் கீழ் செயல்பட்டால் இணை உரிமம் வலையமைப்பு நகலெடுப்புக்கு வழிவகுக்கலாம்.

முக்கியமாக, நுகர்வோர் தங்களுக்குப் பிடித்தமான சப்ளையரை எளிதாக மாற்றிக்கொள்ள முடிந்தால் மட்டுமே போட்டி முறையானது மலிவான கட்டணங்களையும் சிறந்த சேவையையும் வழங்கும். அதற்கு நுகர்வோர் மாறுதல் நடைமுறைகள், அளவீடு (metering), பில்லிங், திட்டமிடல் மற்றும் தீர்வு (settlement) குறித்த தெளிவான விதிகள் தேவை. மேலும், பகிரப்பட்ட வலையமைப்புகளானது இழப்பு மதிப்பீடு, கூட்டு அளவீடு, அமைப்பு செயல்பாடு மற்றும் உரிமதாரர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு போன்ற விஷயங்களையும் சிக்கலாக்கும்.

முன்னோக்கிச் செல்லும் வழி

தற்போது, இணை உரிமமானது இரண்டு முரணான இலக்குகளுக்கு இடையில் சிக்கியுள்ளது: தற்போதைய மாநில மின் வாரியங்களின் நிதி நிலைத்தன்மையைப் பாதுகாப்பது மற்றும் நுகர்வோருக்குச் சிறந்த மின் விநியோகத்தை வழங்குவதற்காகப் போட்டியை அறிமுகப்படுத்துவது.

லாபம் தரும் நுகர்வோரைத் தேர்ந்தெடுத்துப் பிடிப்பதால் ஏற்படும் வருவாய் இழப்பு குறித்த மின் வாரியங்களின் கவலைகள் நியாயமானவையே. அதே நேரத்தில், நுகர்வோருக்குக் கூடுதல் தெரிவுகளும் மேம்பட்ட நம்பகத்தன்மையும் கிடைக்கும் என்ற கருத்து சில நுகர்வோர் மற்றும் துறை சார்ந்த பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றுள்ளது. மறுபுறம், தனியார் உரிமதாரர்கள் மேம்பட்ட தொழில்நுட்பங்களை அதிகம் பயன்படுத்துவதன் மூலம் செயல்திறனை மேம்படுத்த முடியும்.

இந்த நலன்களைச் சமன் செய்வதற்கு, நியாயமான வீலிங் கட்டணங்கள் மற்றும் அதிக மதிப்புள்ள நுகர்வோருக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகம் செய்வதைத் தடுப்பதற்கான பாதுகாப்புகள் உள்ளிட்ட வலுவான ஒழுங்குமுறை மேற்பார்வை அவசியமாகும். ஏற்கனவே உள்ள PPAs, வலையமைப்பு விரிவாக்கம், இழப்புகளைப் பகிர்ந்தளித்தல், ஒழுங்குமுறை சொத்துக்கள் மற்றும் குறுக்கு–மானியங்களைப் பகிர்ந்துகொள்ளுதல், மற்றும் நுகர்வோர் மாறுதல் ஆகியவற்றுக்கான தெளிவான விதிகளும் தேவை. இத்தகைய தெளிவான விதிகள் இல்லையெனில், இணை உரிமக் கொள்கையானது தான் அடைய விரும்பும் நோக்கங்களை வெற்றிகரமாக நிறைவேற்றத் தவறிவிடக்கூடும்.

— குஷி ரோஹ்தகி அவர்கள் பவர் லைன் ஆகஸ்ட் 2026 இதழில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

TBCB projects lift Power Grid's order pipeline to ₹1.75 lakh crore

State-run Power Grid's order pipeline swelled to ₹1.75 lakh crore at the end of the June quarter from roughly ₹1.48 lakh crore in the same period a year ago. Tariff based competitive bidding (TBCB) accounted for more than 80 per cent of the projects.

Revenue visibility

At the end of the June quarter, TBCB projects accounted for around ₹1.46 lakh crore of the company's overall project pipeline. This was followed by regulated tariff mechanism (RTM) projects at around ₹25,000 crore. The other businesses, smart metering, data centre, and battery energy storage system (BESS), cumulatively stand at ₹4,200 crore.

While the Maharatna company reported a weaker than expected operating performance on a standalone basis in Q1 FY27, the robust pipeline offers revenue visibility, said an official.

Coupled with this is the government's substantial bidding pipeline, such as the over 900 GW generation pipeline by FY36, hydro potential in the North-East and upcoming data centre capacity," the person added.

Besides, the current bidding pipeline is very strong. Around ₹73,875 crore worth of transmission projects are under bidding with another ₹45,000 crore to be floated. That takes the total bidding pipeline to ₹1.19 lakh crore. Major projects include the Rajasthan Barmer complex HVDC (high voltage direct current), Jam Khambhaliya-Jamnagar-Lakadia project, the ERES Nawada-Durgapur, among others

Capex guidance

Going ahead, the driver of the transmission investment cycle is the Central Electricity Authority's strategic transmission plan to integrate around 914 GW of non-fossil fuel capacity by FY36. Add to it the estimated ₹6.4-lakh crore plan for exploiting hydro power potential in the Brahmaputra basin and around 71 GW of demand from the data centres.

The company has given a capex guidance of ₹37,000 crore for FY27. At the end of Q1 FY27, Power Grid's gross fixed assets stood at around ₹3.25-lakh crore.

Thanks : The Hindu Business Line 01.09.2026

Dr. J. Radhakrishnan appointed as TNERC chairperson

CHENNAI: Senior IAS officer Dr J Radhakrishnan has been appointed chairperson of the Tamil Nadu Electricity Regulatory Commission (TNERC), nearly three months after the power regulator became completely defunct for the first time since its constitution in 1999.

The state government also appointed former TNPDCLdistribution director Er. Mascurnas as member and Thiru. A Muthusaratha as member (Legal), filling all three statutory posts through an order issued by the Energy Department on Friday.

TNERC had been without any office-bearer since June 25 after chairman R Manivannan resigned. Member (Legal) B Mohan had demitted office on March 9, while member K Venkatesan completed his tenure on June 1.

Er. Manivannan, who remained the lone office-holder from June 2, resigned on June 19 and his resignation was accepted on June 24.

The government had constituted a three-member selection committee on July 1 to fill the vacancies.

The committee, headed by retired Madras High Court judge Justice RMT Teekaa Raman, met on September 15 and recommended panels of two names for each post.

Dr. J. Radhakrishnan, currently additional chief secretary and director of the Anna Administrative Staff College and director general of training, has been appointed chairperson.

TNERC had previously faced periods without the mandatory quorum of two members, but at least one office-holder remained in place on every occasion.

The present vacancy was unprecedented.

The commission regulates electricity tariffs, power procurement and transmission charges, besides framing regulations and adjudicating disputes in the power sector.

Thanks : DT Next 18.09.2026

Chhattisgarh discom disconnects power to Government Departments over Rs 3000 crore dues

RAIPUR: In a major crackdown against mounting electricity dues and non-compliance with smart prepaid metering, the state power distribution company (Discom) has begun disconnecting power lines to delinquent government departments across Chhattisgarh.

Over a single week, electricity supply to 747 government offices was severed across various districts, sending bureaucratic circles into a scramble.

The immediate action yielded swift results, compelling 417 of the affected offices to promptly clear their arrears, recovering Rs 4.43 crore into the power distribution utility's accounts. The 747 disconnected connections collectively owed Rs 12.83 crore, with several offices failing to pay their bills for months, and in some cases, extending past an entire year.

Across the state, government departments have accumulated pending electricity bills exceeding Rs 3,000 crore, with several agencies defaulting on payments for over two years, officials said.

The Urban Administration and Development Department tops the list of defaulters with unpaid bills exceeding Rs 1,200 crore. Other major defaulters owing crores of rupees include the Panchayat and Rural Development Department, Public Health Engineering (PHE), School Education, Forest, Health, and Scheduled Caste Welfare departments.

The enforcement drive also stems from administrative compulsion under the Central Government's Revamped Distribution Sector Scheme (RDSS). Under this scheme, the next installment of central funds remains frozen until state government offices systematically clear their overdue power bills.

Despite 80% of government connections having been upgraded with smart meters, departments have shown little interest in shifting to the mandatory prepaid format. Although the discom announced that government smart meters would switch to prepaid mode starting August 1, most offices have dragged their feet, with merely Rs 1.5 crore received in prepayments so far. Even with an option provided to clear arrears in installments alongside prepaid recharges, departments have consistently ignored reminders, forcing the discom management to resort to widespread disconnections.

Thanks : The New Indian Express 15.09.2026

ஆள் இல்லாமல் ஆட்டம் காணும் மின் வாரியம்: காலிப்பணியிடங்களால் கலங்கும் ஊழியர்கள்

மதுரை: தமிழக மின்வாரியத்தில் அதிகரிக்கும் காலிப்பணியிடங்களால் கூடுதல் பணிச்சுமை ஏற்படுவதுடன், மின் நுகர்வோருக்கான சேவைகளிலும் பாதிப்பு ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மின்துறை அமைச்சர் நிர்மல்குமார் வெளியிட்ட வெள்ளை அறிக்கையில், '65,921 காலிப்பணியிடங்கள் உள்ளதாகவும், விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுப்பதாகவும்' தெரிவிக்கப்பட்டது. ஆனாலும், ஏற்கனவே மின்வாரிய தேர்வில் வெற்றி பெற்றோர், ஒப்பந்த ஊழியர்கள் என, நிரந்த பணியிடங்களுக்கு காத்திருப்பவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

இந்நிலையில், மின் கணக்கீட்டாளர், களப்பணியாளர் உள்ளிட்ட முக்கிய பணியிடங்கள் , 60 சதவீதத்திற்கு மேல் காலியாக இருப்பதால், மின் கட்டண வருவாயிலும் இழப்பு ஏற்படுவதாக தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன. மின்வாரியத்தில் கள உதவியாளர்களுக்கான தேர்வு கடந்தாண்டு நடத்தப்பட்டு, தரவரிசைப்பட்டியல் மே மாதம் வெளியிடப்பட்டது.

ஆனால், இன்னும் இவர்களுக்கான உடற்தகுதி தேர்வு குறித்த அறிவிப்புகள் இல்லாமல், எழுத்து தேர்வில் வெற்றி பெற்றோர் மாதக்கணக்கில் காத்திருக்கின்றனர். சில நாட்களுக்கு முன், அமைச்சர் நிர்மல்குமார், 10 ஆயிரம் களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்போவதாக பேசியது, தேர்வு எழுதியோர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல், மின்வாரியத்தில், 2018 வேலைப்பளு ஒப்பந்தப்படி, அனுமதிக்கப்பட்ட, 7,591 மின் கணக்கீட்டாளர் பணியிடங்களில், ஆறாயிரத்திக்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் உள்ளன.

இதனால், மின் ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களே பல ஆண்டுகளாக கணக்கீட்டு பணியையும் செய்கின்றனர். கணக்கீட்டாளர்கள் இல்லாத இடங்களில் ஓய்வுபெற்றவர்கள், 'அவுட்சோர்சிங்' முறையில் பணியாற்றுகின்றனர். மின் இணைப்புகளின் எண்ணிக்கைக்கேற்ப கணக்கீட்டாளர்கள் நியமிக்கப்படாததால், பல்வேறு குளறுபடிகள் ஏற்படுகின்றன.

மின்வாரியத்தில் காலிப்பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

நன்றி : தினமலர் 04.09.2026

Power demand zooms, Chennai plant resumes operations

CHENNAI: Nearly five years after it was last operated, the Tamil Nadu Power Generation Corporation Limited (TNPGCL) has resumed power generation at the Basin Bridge Gas Turbine Power Station to meet the rising peak demand in Chennai.

The plant with four 30 MW units with a combined capacity of 120 MW is expected to generate power till September 16 as the city's electricity demand has been rising steadily, similar to the trend witnessed during the summer months. TNPGCL has decided to operate the first two units and generate 60 MW.

According to data accessed by TNIE, Chennai's peak power demand touched 4,469 MW on September 10, 2026, compared to 3,884 MW during the same period last year. A senior TNPGCL official said the sudden rise in demand had put pressure on the utility, particularly during the morning and evening peak hours.

“Usually, we procure additional power from the electricity exchanges during peak hours or when demand rises during summer. But this year, several states are witnessing high demand even in September. As a result, the availability of power on the exchanges is also limited,” the official told TNIE.

With limited power available through exchanges and other sources, the utility decided to restart the Basin Bridge gas-based power station to meet the additional requirement in Chennai. The official said generation from the plant would help the utility manage the morning and evening peaks and ensure uninterrupted power supply in the city.

Explaining the fuel arrangements, another official said the units could be operated using naphtha and natural gas under a dual-fuel system, while high-speed diesel (HSD) is used as the starting fuel.

“Due to the non-availability of natural gas in Chennai, the units were operated on naphtha. The cost of generation at the plant was `12 per unit. We did not generate power at the station for the past five years due to the high cost of generation,” the official said.

TNPGCL has now decided to operate the power station fully on HSD with 60,000 litres of diesel procured from Indian Oil Corporation (IOC) for the purpose. “We expect the cost of generation to touch Rs 30 per unit. However, the present situation has forced the utility to generate power at the gas-based plant to meet the additional demand,” the official added.

POWER DEMAND & CONSUMPTION (SEP 1-10)

DATE	DEMAND (IN MW SEP, 2025)	CONSUMPTION (IN MU SEP, 2025)	DEMAND (IN MW SEP, 2026)	CONSUMPTION (IN MU SEP, 2026)	DATE	DEMAND (IN MW SEP, 2025)	CONSUMPTION (IN MU SEP, 2025)	DEMAND (IN MW SEP, 2026)	CONSUMPTION (IN MU SEP, 2026)
01	3,730	73,715	4,562	90,155	06	3,696	74,319	4,805	78,179
02	3,653	77,672	4,655	93,854	07	3,564	69,875	4,523	84,414
03	3,683	74,959	4,255	89,973	08	4,037	79,093	4,483	87,222
04	3,749	75,555	4,191	86,738	09	4,165	83,622	4,708	89,58
05	3,747	79,605	4,270	84,931	10	3,884	33,524	4,469	91,306

Thanks : The New Indian Express 12.09.2026

பொறியாளர் சங்க
உறுப்பினர்கள் அனைவருக்கும்
ஆயுதபூஜை, சரஸ்வதிபூஜை மற்றும்
விஜயதசமி
நல்வாழ்த்துக்களை
பொறியாளர் சங்கம்
தெரிவித்துக்கொள்கிறது.

Rs 13,000 crore wasted in Uppur thermal plant: TN minister Nirmalkumar

CHENNAI: The stalled Uppur supercritical thermal power project in Ramanathapuram district has cost Tamil Nadu govt nearly Rs 13,000 crore, including interest, while equipment procured for the project had been lying unused suffering corrosion, state energy and law minister R Nirmalkumar said on Saturday.

The minister inspected the 2x800MW (1,600MW) project site, which was originally estimated to cost Rs 15,000 crore, to ascertain its present status and assess whether the assets already created could be put to use.

Speaking to the media after the visit, he said around Rs 6,000 crore had already been spent on the project and, with interest, the govt funds locked up in it had risen to around Rs 13,000 crore.

The project, planned in 2010, was stopped in 2021 and has remained without progress. The minister said that the equipment procured for the project were lying in warehouses and at the site. “Since the equipment has remained unused for a prolonged period, its present technical condition, extent of corrosion and possibility of reuse will have to be assessed by the manufacturers and technical experts,” the minister said.

He said a significant portion of the water-related works had already been completed, but challenges in coal transportation need to be resolved before the project can be taken forward. “Officials will examine options including transporting coal by sea or rail, using smaller vessels and storing coal at Udangudi before transporting it to Uppur,” he added.

The cost of each alternative and the resulting cost of generating a unit of electricity will be worked out to determine whether the project can be made economically and technically viable, the minister said.

The govt will also examine whether the unused equipment can be reused at Uppur, shifted to another location or otherwise put to productive use, besides assessing how the completed civil and infrastructure works can be utilised.

The minister said a comprehensive assessment would be obtained from the companies associated with the project and technical experts. A decision on the way forward would be taken within 30 to 40 days after examining the technical, financial, administrative and legal aspects, followed by action with the approval of chief minister C Joseph Vijay.

He alleged that the previous govt had abandoned the Uppur project despite substantial expenditure and claimed that none of the ministers concerned had personally inspected the site.

Thanks : The Times of India 20.09.2026

கண்ணீர் அஞ்சலி

பொறியாளர்கள்

1. 05.09.2026 அன்று பொர். C. **இராமசுப்பிரமணியன்**, JE/230 KV Nallamanaickanpatti SS, விருதுநகர் கிளை அவர்கள். 9865230382.
2. 05.09.2026 அன்று பொர். A. **எலிசபெத் மேரி**, AE / 110 KV Manapparai SS, Trichy EDC, திருச்சி கிளை அவர்கள். 97884 38606.

பொறியாளர்களின் மறைவிற்கு பொறியாளர் சங்கம் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளர்களை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது

பொறியாளர் குடும்பத்தினர்கள்

1. 1. 31.08.2026 அன்று பொர். S. **ரேணுகா**, AEE / Mtce / 230 KV கடப்பேரி துணை மின் நிலையம் **அவர்களின் கணவர்**. 9884435614
2. 07.09.2026 Er S. **பன்னீர்செல்வம்**, AEE/O&M/Panchetti, சென்னை வடக்கு கிளை, **அவர்களின் தந்தையார்** 9171990890
3. 07.09.2026 அன்று பொர். T.A.**ஜார்ஜ் பெர்னாண்டஸ்**, AEE / Scheme / Thanjavur, Thanjavur branch, **அவர்களின் தாயார்** 9092879214
4. 13.09.2026 அன்று **சி.முருகேசன்**, உதவி செயற் பொறியாளர் / இயக்கம், **அவர்களின் மகன்** 7010324175
5. 22.09.2026 அன்று பொர். C. **ராபர்ட் வில்சன்**, AEE / Mech / TTPS-1, TTPS Branch **அவர்களின் தாயார்**. 9443989712

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

DRAFT NATIONAL ELECTRICITY POLICY 2026

New Power Policy to Set Stage for Shared Distribution Networks

Policy emphasises flexibility of electricity generating operations

New Delhi: The power ministry has sent the new draft National Electricity Policy 2026 for inter-ministerial consultation, secretary Pankaj Agarwal said on Thursday, adding that it is expected to be approved soon.

The policy would pave the way for shared power distribution networks rules and the unbundling of state transmission utilities, according to the first draft of the policy issued earlier."We have already moved the cabinet note for inter-ministerial consultation, and I think it shouldn't be taking very long," Agarwal said on the sidelines of a power sector conference organized by the Federation of Indian Chambers of Commerce and Industry.

Agarwal said the policy emphasises flexibility of power generating operations and demand loads. The ministry had released a draft policy in January."Flexibility will not only be on the supply side but also on demand and obviously the mandates will be on very large loads, particularly the loads which can accommodate it," he said.

Agarwal said the new policy is taking shape after more than two decades, but the challenges ahead are very different from then, including managing the grid, building the transmission system and ensuring distribution companies are financially sustainable and technologically equipped. He called for a greater focus on designing, developing and manufacturing power sector technologies and equipment in India, while also building capabilities for global markets.

Smart meter chip making has the potential to be a "designed in India" product, he said, adding that some of the chip developers are actively engaged in discussions. Central Electricity Authority chairperson Ghanshyam Prasad, who also addressed the session, said the changing dynamics of electricity demand and generation require innovative solutions and a more systematic approach to power-system planning and operations."Earlier, generation and demand were relatively predictable. Today, we are experiencing greater variability in demand and greater uncertainty in generation," Prasad said.

காமதேனு நலநிதித் திட்டம் VI:

அன்புள்ள பொறியாளர்களே

கீழ்க்கண்ட தொகையைச் செலுத்தி KBF VI திட்டத்தில் இணையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்:

புதிய உறுப்பினர்கள் KBF VI – ரூ. 10,050/–;

ஏற்கனவே KBF IV–ல் உள்ளவர்கள் – ரூ. 7,000/–;

ஏற்கனவே KBF V–ல் உள்ளவர்கள் – ரூ. 5,000/–.

ரூ. 3.5 லட்சம் நிதியுதவிப் பலனைப் பெறுவதற்குத் தேவையான 3,000 உறுப்பினர்கள் என்ற இலக்கை அடைய, நாம் உடனடியாக KBF VI திட்டத்தில் இணைவோம்.

KBF–ல் சேறுவதற்கான நிபந்தனைகள்:

உறுப்பினர் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

* TNEB பொறியாளர்கள் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் (Life Member),
* சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்பவராகவும் இருக்க வேண்டும்.

KBF பலன்களைப் பெறுவதற்கான நிபந்தனைகள்:

* திட்டத்தில் சேர்ந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்து இருக்க வேண்டும்
* கடைசி இரண்டு ஆண்டுகளுக்கான வருடாந்திர நன்கொடை மற்றும் சந்தாத் தொகையை, ஊதியப் பிடித்தம் மூலமாகவோ அல்லது நேரடி ரொக்கப் பணமாகவோ கட்டாயம் செலுத்தியிருக்க வேண்டும்.

அன்புடன். பொர்.**R.சந்தோஷ் குமார்,** செயலாளர்/காமதேனு நலநிதி

பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 31.08.2026 அன்று வாரிய பணியில் இருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல் நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

VOLUNTARY RETIREMENT

1. Er. **R.G.TAMILCHELVI,** EE / Operation / Mettur, Mettur Branch. 9894555410As on (As on 07.08.2026)
2. Er. **X.VIJI, AE / CAUP** / Guindy, Chennai South Branch. 8973617241 (As on 31.08.2026)
3. Er. **S.SUGANTHALAKSHMI,** AE / General, Chennai West Branch. 9940191502 (As on 14.08.2026)
4. Er. **S.BOOPATHY,** AEE / Shift / 230KV SS / Singarapettai, Krishnagiri Branch. (31.08.2026)

தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு. சென்னை

நாள் : 19.09.2026

பெறுநர்:
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள்,
தமிழ்நாடு மின்சார வாரியம் லிமிடெட்
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்.

தமிழ்நாடு மின்வாரியத்தில் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு கூட்டம் 10.09.2026 அன்று தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளன சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் நடைபெற்று முடிந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் தூத்துக்குடியில் ஏற்கனவே உள்ள மின்நிலையத்தை படிப்படியாக மாற்றி அங்கு புதியதாக 2x800 மெகாவாட் மின்சாரம் அரசு, தனியார் பங்களிப்பு திட்டத்தில் (PPP) துவங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 110 விதியின் கீழ் அறிவித்துள்ளார். அதே போல மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் புதியதாக 5 ஆண்டுகள் ஒப்பந்தமுறை (FTE) என்ற வகையில் 10,000 பணியாளர்கள் பணிக்கு நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்துள்ளார். அதுமட்டுமன்றி ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை ஏற்கனவே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்புகள் அனைத்தும் தனியார் பாதையில் மின்சார வாரியம் வேகமாக செல்கிறது என்று உறுதி செய்கிறது. இந்த திட்டங்கள் தமிழக மக்களுக்கும், மின்வாரிய தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் உள்ளது.

தமிழக மின்சார வாரியம் 1947 தொழிற்தாவா சட்டத்தின்படி முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் இயங்கி வரும் ஒரு நிறுவனமாகும். ஏற்கனவே வேலைப்பளு ஒப்பந்த அடிப்படையில் மாற்றங்கள் ஏற்படுத்த தமிழக மின்வாரியம் விரும்பினால் 9(A) நோட்டீஸ் அளித்து தொழிற்சங்கங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி அதன் பிறகே புதிய முன்மொழிவுகள் அமலாக்கம் செய்திட வேண்டும். தமிழக அரசின் அறிவிப்புகள் இதற்கு நேர் எதிராக உள்ளது என்று தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு கருதுகிறது. எனவே தமிழக அரசு அறிவித்துள்ள PPP திட்டம், ஸ்மார்ட் மீட்டர் திட்டம், 5 ஆண்டு ஒப்பந்தமுறை திட்டம் (FTE) அனைத்தையும் கைவிட வேண்டுமென்று கூட்டு நடவடிக்கைக்குழு கேட்டுக்கொள்கிறது.

<u>கோரிக்கைகள்</u>

1. தமிழக அரசு அறிவித்துள்ள ஸ்மார்ட் மீட்டர் திட்டம் மற்றும் ppp முறையில் அமல்படுத்த உள்ள அனல், புனல் மின்நிலைய திட்டங்கள், மின் வழித்தடங்கள் திட்டங்களை திரும்ப பெறுக!
2. 5 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் (Fixed Term Employment) முறையில் பணி நியமனம் செய்யப்படும் என்ற அறிவிப்பை திரும்ப பெருக!
3. அரசு ஊழியர்களுக்கு உயர்த்தி வழங்கிய பணிக்கொடை ரூபாய் 20 லட்சத்திலிருந்து–25 லட்சத்தை மின் வாரிய பணியாளர்களுக்கும் வழங்கிடுக!
4. வாரிய ஆனை எண் 2 ஐ ரத்து செய்திடுக..

மேற்கண்ட கோரிக்கைகள் மீது தமிழக மின்சார வாரியம் தொழிற்சங்கங்களை அழைத்து பேசி மின்வாரியத்தில் சுமூக சூழலை ஏற்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். முத்தரப்பு ஒப்பந்தப்படி போடப்பட்ட ஒப்பந்தங்களை மீறி தமிழக மின்வாரியம் மேற்கண்ட திட்டங்களை அமலாக்கம் செய்யுமானால் கீழ் கையொப்பமிட்டுள்ள தொழிற்சங்கங்கள் தொழிலாளிகள், அதிகாரிகள், பொறியாளர்களை ஒன்று திரட்டி நாங்கள் அடுத்தக்கட்ட தொழிற்சங்க நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை நடத்தி தொழில் அமைதியை காத்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம். விரைந்து பேச்சுவார்த்தை நடத்திட தேதியை அளித்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள
தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்கங்களின்
கூட்டு நடவடிக்கைக்குழு
சென்னை

MIN ALAI - September 2026 RNI No. TNBIL / 2012 / 47622

Printed Book Periodical

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 23.09.2026 அன்று தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில் மின்உற்பத்தி, மின்விநியோகம் மற்றும் மின்கட்டமைப்பு ஆகிய செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 23.09.2026 அன்று தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில் மின்னகம் – மின்நுகர்வோர் சேவை மையத்தை பார்வையிட்டு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து கேட்டறிந்தார்.

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam